செய்தி குறிப்பு எண்.168 நாள்.07.12.2007

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கொடிநாள் உரை – வரைவு

இன்று டிசம்பர்த் திங்கள் 7ஆம் நாள் !
கொடி நாள் !

நாடு காத்திடும் அரும்பணியில்
பீடுடன் கடமையாற்றிடுவோர் நமது படைவீரர்கள்;

அவர்தம் நலன் பேணிடும் திருப்பணிகளில் பங்கெடுத்திடும் உணர்வை
நாட்டுமக்களிடம் வளர்த்திடும் திருநாள் இந்நாள்!

பெரும்மழை கொட்டும்!

கடும்பனி வாட்டும்!

கொடுங்குளிர் வருத்தும் !

காயும் வெயில் சுட்டெரிக்கும்!

பாயும் பகை விமானங்கள் குண்டு மழை பொழியும்!

அடுத்த நொடியில் ஆருயிர்கூடப் பறிக்கப்படலாம்! ஆயினும் – அவ்வேளையிலும்,

“அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!

உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை ……” - என்ற

உறுதிப்பாட்டோடு;

அச்சத்தைத் துச்சமாக்கி –

இரவும் பகலும் – இமைப்பொழுதும் சோராமல் –விழிப்புடன் எல்லைப் புறங்களில்
நின்று நாட்டையும் நம்மையும் காத்திடும் தியாகத் திருச்சுடர்களாம் படைவீரர்கள்
நலன் காத்திட–

உளம் மிகக் கொண்டு உதவிடும் வாய்ப்பை–

நம் ஒவ்வொருவருக்கும் வழங்கும் உன்னதத் திருநாள் – இந்தக் கொடிநாள் !

**தமிழ் மண்! வீரம் செறிந்த மண்!**

**ஆணும் பெண்ணும் நிகரென நின்று,**

**மானம் காத்த மகத்துவம் நிறைந்த மண் !**

**சீறிவரும் பகைவரின் சிறகொடித்திட –**

**வெற்றி அல்லது வீர மரணம்!**

**எனத் தீரர்களாய் எழுச்சி கொண்டு, இளைஞர்கள்**

**போர்க்கோலம் பூண்ட மண் இது !**

**முதல்நாள் போரில் தந்தை மடிந்தான் !**

**அடுத்த நாள் போரில் காதல் கணவன் வீடு திரும்பவில்லை !**

**எனினும், மறுநாள் பகை முரசு கேட்டதும்**

**பொங்கி எழுந்து – அருமை மகனே! என அழைத்து, வேல் கை கொடுத்து**

**இன்று நீ சென்று, பகைவரை வென்று மீண்டிடுவாய் – வெற்றித்**

**திருமகனாய் !**

**- என்று வாழ்த்தி, புறப்படடா என் புலிப்போத்தே! எனப் போருக்கு அனுப்பிய**

**புறநானூற்றின் வீரத் தாய்க்குலம் வாழ்ந்த மண் இது !**

**வெட்சி–கரந்தை**

**வஞ்சி– காஞ்சி**

**நொச்சி–உழிஞை**

**தும்பை– எனப் பூக்களின் பெயரில் போர்முறைகளை வகுத்துக்**

**களம்கண்டு, வாகை சூடி –**

**மாயா ஜாலமின்றி – மந்திர தந்திர வித்தைகளின்றி**

**வேலும் வாளும் ஏந்தி**

**தோள் வலி காட்டி**

**நேருக்கு நேர் மோதி – வாகை சூடிப்**

**பேரும் புகழும் கொண்ட**

**சீரும் சிறப்பும் நிறைந்த மண் –**

**இந்த மண், தமிழ் மண்!**

**இம்மண், அன்று போல் இன்றும் வீரத்தைப் போற்றுகிறது!**

வீரர்களை மதித்து வணங்குகிறது!
வீரர்களையும்—வீரர்களின் குடும்பங்களையும் காப்பதில்— நிதி தந்து உதவுவதில் முன்னணியில் நிற்கிறது.
இதனைக் குவலயத்திற்குக் கூறிடும் நாள் !
இந்தக் கொடிநாள்!

நாடு காத்திடும் நல்லோரைக் காத்திட
நிதி வழங்குவதில் நமது தமிழக மக்கள் கடந்த காலங்களில் எல்லாம் வரலாறு படைத்துள்ளனர்.

1962—சீனா நம்மீது போர்தொடுத்த நேரம் !

பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணைப்படி, சேலத்தில் மாநாடு கூட்டி—நிதிதிரட்டி, அந்நாளைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களிடம் அளித்தோம்.

1971— பாகிஸ்தான் நம் மீது போர்தொடுத்த நேரம்! அந்நாளைய பிரதமர் நமது அன்பிற்குரிய அன்னை இந்திராகாந்தி அவர்களைச் சென்னைக்கு அழைத்து, மற்ற மாநிலங்களை விட அதிகமாக, ஆறு கோடி ரூபாயைப் போர்ப் பாதுகாப்பு நிதியாக அளித்தோம்.

1999ஆம் ஆண்டில், கார்க்கில் பகுதியில் ஊடுருவிய பகைவரை விரட்டிட தேசிய பாதுகாப்பு நிதிக்கு 50 கோடி ரூபாய் நிதி வழங்கிய மாநிலம் தமிழகம்தான் என்ற பெருமையை நாம் பெற்றோம்.

அன்று தமிழக மக்கள் அள்ளித் தந்த நிதி ரூபாய் 59 கோடியில் எஞ்சிய தொகையை இருப்பு வைத்து;

எல்லைப் பகுதிகளில் தொல்லைகள் தந்திடும் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு உயிர் நீத்திடும் தமிழக வீரர்களின் குடும்பங்களுக்குக் கருணைத் தொகையாக 5 இலட்ச ரூபாயும், ஊனமுற்றோருக்கு அவர்களின் ஊனத்தின் தன்மைகளுக்கேற்ப 3 இலட்ச ரூபாய் வரையிலும், நிதி வழங்கிப் படைவீரர்களின் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு உணர்வை அளித்து வருகிறோம்.

இப்படிப் போர்க் காலங்களில் நிதி வழங்கிய வரலாற்று நிகழ்வுகள் மட்டுமல்லாமல்,

குஜராத் மக்களைக் கொடுமைக்கு ஆளாக்கிய கடும் பூகம்பம்,

ஒரிசா மாநில மக்களைத் தாக்கிய கோரப் புயல்

–போன்ற இயற்கைச் சீற்றங்களின் போதும்

நாம் வழங்கிய நிதிகள் எல்லாம் நமது தமிழக மக்களின் தாராள சிந்தைக்குத் தக்க சான்றுகளாகத் திகழ்ந்து கொண்டுள்ளன.

இவைமட்டுமல்லாமல் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்ற கொடிநாளின் போதும் மற்ற மாநில மக்களை விட தமிழக மக்கள் வாரி வழங்கும் கொடிநாள் நிதியைப் பயன்படுத்தி, முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் தேவையான பல உதவிகளை ஆற்றி வருகிறோம்.

உலகப் போரில் பணியாற்றி, வறிய நிலையில் வாடும் முன்னாள் படைவீரர்களுக்கு 700 ரூபாய் வீதமும், அவர்களின் விதவையர்களுக்கு 500 ரூபாய் வீதமும், மாதந்தோறும் நிதியுதவி வழங்குகிறோம்.

கொடுமையான தொழுநோய், காசநோய், பக்கவாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கும்,

கண்பார்வை இழந்தோருக்கும் மாதம் 500 ரூபாய் வீதமும்,

புற்றுநோய் தாக்கி அவதியுறுவோருக்கு மாதம் 700 ரூபாய் வீதமும்,

பக்கவாத நோய் மற்றும் கண்பார்வையற்ற சிறார்க்கு மாதம் 300 ரூபாய் வீதமும்,

அவர்களின் வாழ்நாள் முழுதும் வழங்கி வருகிறோம்.

முன்னாள் படைவீரர் குடும்பங்களின் கல்வி வளர்ச்சிக்காக,

மருத்துவப் பட்டப் படிப்பில் 2 இடங்கள்,

பல் மருத்துவப் பட்டப் படிப்பில் ஓர் இடம்,

மருத்துவக் கல்வி நிலையங்களில்,

பாரா மெடிக்கல் பட்டப் படிப்புகளான பி.பார்மசி, பி.எஸ்.சி.(நர்சிங்), பிசியோதெரபி ஆகிய படிப்புகளில் தலா ஓர் இடம்,

பொறியியல் பட்டப் படிப்பில்
81 இடங்கள்,

பாலிடெக்னிக் பட்டயப் படிப்பில்
80 இடங்கள்,

பி.ஏ., பி.எஸ்.சி. பட்டப் படிப்புகளில் ஒவ்வொரு கல்லூரியிலும் 6 இடங்கள்,

பி.எட்., பட்டப் படிப்பில் ஒவ்வொரு கல்வியியல் கல்லூரியிலும் ஓர் இடம்,

ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களில்
132 இடங்கள்,

கால்நடை ஆய்வாளர் பயிற்சியில்
5 விழுக்காடு இடங்கள்,

–என்பனவாய் கல்விப் பிரிவுகள் அனைத்திலும் இட ஒதுக்கீடுகளை வழங்கி முன்னாள் படைவீரர்களும், அவர்களது வாரிசுகளும், வழிவழியாகப் பயன்பெற படிக்கும் வாய்ப்புகளைப் பல்லாற்றானும் பெருக்கித் தந்துள்ளோம்.

பள்ளிப் படிப்பு முதல் கல்லூரிப் படிப்பு முடியும்வரை படிப்பு உதவித் தொகைகள் வழங்குகிறோம்.

முன்னாள் படைவீரர்களுக்கு மறு வேலைவாய்ப்புகளுக்கு வழிவகை செய்வதுடன், அவர்களின் குடும்பத்தாரின் வேலை வாய்ப்புகளுக்கு உதவும் பல்வேறு பயிற்சிகளையும் அளிக்கிறோம்.

இத்தகைய பல்வேறு பணிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருவதுடன் 2006 ஆம் ஆண்டு இந்த அரசு அமைந்தபின்,

முன்னாள் படைவீரர்களின் குறைகளை உடனுக்குடன் களைந்திட ஏதுவாக மாவட்டங்களில் உள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் அனைத்தையும் கணினி மயமாக்கி, அவற்றை முன்னாள் படைவீரர் நல இயக்ககம் மற்றும் முப்படைகளின் ஆவணக் காப்பகங்களுடன் ஒரு முகமாக இணைத்திடும் இணையதள வசதியை ஏற்படுத்தியுள்ளோம்.

முப்படை வீரர்கள், முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தாரை நாடிச் சென்று நலம் பேணிட வசதியாக – வாகனங்கள் இல்லாத 8 மாவட்டங்களுக்கு, 34 இலட்சம் ரூபாய்ச் செலவில் 8 வாகனங்கள் வழங்கியுள்ளோம்.

மாவட்டங்களில் முன்னாள் படை வீரர்களுக்கான நலத் திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்திட உதவும் வகையில், நீண்ட காலமாகக் காலியாக இருந்த 16 உதவி இயக்குநர் பணியிடங்களையும், 17 நல அமைப்பாளர் பணியிடங்களையும் நிரப்பி உள்ளோம்.

தமிழ்நாடு காவல்துறையில் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயல் இழக்கச் செய்தல் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற 42 முன்னாள் படைவீரர்களுக்கு நிரந்தரப் பணி நியமனங்கள் அளித்துள்ளோம்.

இத்தகைய பல்வேறு சலுகைகளையும், உதவிகளையும் தொடர்ந்து அளிப்பதில்,
கொடி நாள் நிதி பெரிதும் பயன்படுகிறது.

2006–2007 ஆம் ஆண்டில் மட்டும் முன்னாள் படைவீரர் குடும்பங்களுக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் 20 ஆயிரம் பேருக்கு
11 கோடி ரூபாய் அளவுக்கு உதவிகள் அளிக்கப் பட்டுள்ளன.

இவையெல்லாம், அருமைத் தமிழ் மக்கள் அன்புடன் வாரிவழங்கிய கொடிநாள் நிதியின் துணைகொண்டே நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதனை நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

வரும் ஆண்டுகளிலும் முன்னாள் படைவீரர் குடும்பங்களின் நல வாழ்வையும், வள வாழ்வையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பும், அரும்கடமையும் நமக்கு உண்டு என்னும் உணர்வோடு, அவற்றை நிறைவேற்றும்வகையில் இந்த ஆண்டின் கொடிநாள் நிதிக்குத் தாராளமாய் நிதி வழங்கி உதவிடுவீர் எனத் தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

நாடு காத்திடும் படைவீரர்களை
நாம் காத்திடுவோம்! – கொடிநாளில்
நம்மால் இயன்றவரை
நிதியளித்திடுவோம் !

* * *